மரமண்டைகளும் புரிந்துகொள்ளும்

விஷயமாயிற்றே !

'அர்த்தமில்லாப்பிரச்னை'யை அமைச்சர் அடுத்தடுத்துத் தொடுவதேன்?

தெளிவு பிறக்காவிடில், நிதியமைச்சரை நாடட்டும் !

:0:

பொறுப்புள்ள மந்திரியார் பொருளற்றுப் பேசுவதேன் ?

ஆணவமா, அறியாமையா, அதிகார போதையா-எது காரணம் ?

கடவுள் பெயரால் ஒரு சமூகத்தார் மற்றவர்களை ஏமாற்றி வருகிறார்கள் என்ற பொய்ப் பிரசாரம் சிலரால் செய்யப்பட்டு வருகிறது.

ஆரியர்—திராவிடர் பிரச்னையை சிலர் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். யார் ஆரியர்? யார் திராவிடர்?

இந்தியா புது அரசியல் திட்டத்தைத் தயாரித்துள்ளது. ஜனவரி 26-ம் தேதி முதல் அமுலுக்கு வர விருக்கிறது. தமிழ்நாடு இந்திய யூனியனிலிருந்து விலகி தனித்திருக்க முடியாது. திராவிடஸ்தான கோஷத்தில் அர்த்தமே கிடையாது. இந்த கோஷங்கள் காரணமாக பகைமையும், விரோதமும், ஆத்திரமும்தான் பெருகும்.

தமிழைக் காப்பாற்றுவதாகச்சொல்லி கம்பராமாயணத்தைக் கொளுத்துகிறார்கள்.

இம்மாதிரியான கிளர்ச்சிகளெல்லாம் அதிகாரத்தைக் கைப்பற்றவே யொழிய வேறில்லை.

இவை நமது கல்வி அமைச்சர் மாதவமேனனார், கோவை யூனியன் உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழாவில் பேசிய போது சிந்திய கருத்து மணிகள் !

மற்ற அமைச்சர்களைவிட திராவிடர் இயக்கத்தைச் சாடும் அரும்பணியை அதிகமாகச் செய்து வருபவர் அமைச்சர் மாதவமேனனார். [illegible] சிலை ஏசிக்கொண்டிருப்பதுதான் மேலிடத்தால் மகிழ்வைக்கும் பணி என்று எண்ணிக்கொண்டிருக்கு[illegible] அமைச்சர் அவருடைய [illegible] படிப்பட்ட [illegible] வரைபற்றி [illegible] கேள்விக்கேன்[illegible] தனுடைய சி[illegible]காலையிட்டு [illegible] அவர் [illegible] பட்டு வாளா[illegible] என்று நாம சும்மாயிருந்தாலும், தம[illegible] 'சும்மாயிரும்' [illegible] அறியேன்'' என்கிற [illegible] கல்வி அமைச்சர். [illegible] கூற்றுகளை அடிக்கடி அள்ளி வீசி நமது பொறுமையைச் சோதிக்கிறார். மகான்களை மரக்கட்டைகள் என்றெண்ணிக்கொண்டு எதை யெதையோ உளறிக்கொட்டுகிறார்.

கடவுள் பெயரால் ஒரு சமூகத்தார் மற்றவர்களை ஏமாற்றி வருகிறார்கள் என்று யாரோ சிலர் பிரசாரம் செய்கிறார்களாம். இதுதான் அமைச்சரின் முதல் குற்றச்சாட்டு.

கல்வி மந்திரியாக விளங்கும் மாதவமேனனின் இத்தகைய பேச்சுக்கு விரிவான இல செலவிக்கொண்டிருக்க நாம் விரும்பவில்லை. ஏனெனில் அவர் படித்துப் பட்டம் பெற்றவர். கல்வி கேள்வி அதி[illegible] [illegible] சரித்[illegible] [illegible] புரட்சி[illegible] [illegible] [illegible] வரலாற்றை மறந்திருந்[illegible]

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502
விலை அணா ஒன்று!

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (1—12—49) ✿ வெளியீடு (2—12—49) [இதழ் 105

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போகிறதாம் சேன் 'குருஜி'

ஆர். எஸ். எஸ். வெறியாட்டம் ஓயவில்லை !

எங்க அரசியல் கட்சியினுடையவும் தொண்டர் படை ஸ்தாபனங்களிலோ அவற்றின் நடவடிக்கைகளிலோ செகண்டரி பள்ளி, துவக்கப் பள்ளியாசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொள்ளுதல் கூடாதென பம்பாய் சர்க்கார் விதித்திருக்கும் உத்தரவை ஆட்சேபிக்கும் வகையில் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த சேன் குருஜி என்பவர் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போகிறாராம். குறிப்பாக ஆர். எஸ். எஸ். நடவடிக்கைகளை மட்டும் ஒடுக்கவே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதென்று மேற்படி குருஜி அபிப்ராயப்படுகிறாராம்.

தலைவலை தீருவதற்கு 'இன்செக்ஷன்'

லண்டன், நவ. 30—

ஒற்றைத் தலைவலி ஏற்பட்டால் அதைத் தீர்க்க புது இன்செக்ஷன் முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. —ருளோப்.

பிற்போக்கு கூமின்டாங் படைகளுக்கு அடைக்கலம் தருதல் ஆபத்து

அண்டை நாடுகளுக்கு கம்யூனிஸ்டு சீன எச்சரிக்கை

"தேசிய வாதிகளுக்குப் புகலிடங்கொடுத்து ஆதரிப்பவர்களாயின் நீங்களே பொறுப்பாளிகளாக்கப்படுவீர்களே"ன்று சீனவை யொட்டியுள்ள நாடுகளின் சர்க்கார்களுக்கெல்லாம் கம்யூனிஸ்டு சீன எச்சரிக்கை விடுத்துள்ளது. சீனவிலுள்ள அயல்நாடுகளின் அரசுப் பிரதிநிதிகளுக்கெல்லாம் இவ்வெச்சரிக்கைக் குறிப்பு அனுப்பப்பெற்றுள்ளதாம்.

கூமின்டாங் பிற்போக்கு ராணுவப் படைகளுக்கு அடைக்கலம் தரும் நாடு எதுவாயிருந்தாலும், விளைவுகளை அனுபவித்தே தீர வேண்டுமென்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

சினிமா வானிலே புதிய நட்சத்திரம் !
நாட்டியமணி
வைஜயந்திமாலா
ஏவிஎம் புரொடக்ஷன்ஸ்
வாழ்க்கை
தமிழ்
வாழ்க்கையின் மேடு பள்ளங்களைச் சித்தரிக்கும் ஒரு அற்புத சிருஷ்டி.
விரைவில் வருகிறது

'தேசிய சீன'வின் தலைவர் யாரென்பதில் தகராறு !

இடையறு வெடிகுண்டு வீச்சுக்கிடையே சியாங் 'தந்தி'ச் சண்டை நடத்துகிறார் !

ஹாங்ஹாங், நவ. 30—

சீன தேசிய சர்க்காரின் தலைநகராக இருந்துவரும் சுங்கிங் மீது கம்யூனிஸ்ட்டுகளின் குண்டுகள் விடாமல் பொழிந்துவரும் சமயத்தில் சீன சர்க்காரின் பிரசிடெண்ட் யார் என்ற பிரச்சினையில் தலைவர்கள் சச்சரவிட்டுக்கொண்டிருப்பதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

தலை தப்பினால் போதும் என்று ஓடிய நிலைமையிலும் சியாங்கேஷேக் ஆக்டிங் பிரசிடெண்ட் லியுடன் தன் தகராறை தந்தி மூலம் நடத்தி வருகிறார்.

அமெரிக்காவுக்கு லி போவதென்றால் தனிப்பட்ட முறையில் செல்ல வேண்டுமே ஒழிய, சீன பிரசிடெண்ட் என்ற முறையில் செல்லலாகாது என்று சியாங் லியை எச்சரித்ததாகக் கூறப்படுகிறது. சியாங்கேஷேக் போரின் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்த இன்னும் உறுதிகொண்டிருப்பதாகவே தெரிகிறது. —குளோப்

மாலை மணி

சென்னை 1—12—49 வியாழக்கிழமை

வைதீகக் காவலர்; :: :: புத்துலகத் தோழர்!

இவ்வுபகண்ட அரசாங்கத்தினுடையவும் அதனை இயக்கிவரும் 'தேசீய'த் தலைவர்களுடையவும் போக்கையும் தன்மையையும் நுணுக்கமாயறிந்துவருவோர் நன்குணர்வர் பழமையைப் பாதுகாப்பதிலும் புதுமையை வெறுத்தொதுக்குவதிலும், மதத்துக்கு முடிசூட்டுவதிலும் சீர்திருத்தத்துக்குத் தடை விதிப்பதிலும் இன்ன பிற அறிவு எலாச் செயல்களிலுமே அவர்கள் ஈடுபட்டிருப்பதை. பழைய கருத்துக்கள், கொள்கைகள், நடைமுறைகள் அமைப்புகள் ஆகியவற்றை நிலையாகக் காத்துவரும் பணியினையே தங்களின் இன்றியமையாப் பணியாகக் கொண்டு அவற்றுக்கான விளக்கங்களும் 'சப்பைக் கட்டுகளும்' சமாதானங்களும் தருவதையே நிர்வாகமாகக் கருதி நடத்திச் செல்கின்றனர் அரசாங்கத்தையென்பதை, நாம் சொல்லித்தான் புரிந்துகொள்ளக் கூடிய நிலையில் பொதுமக்கள் இல்லையென்றே நம்புகிறோம். 'தேசீய' சர்க்காரெனக் கூறிக்கொள்ளுமொன்றின் இலட்சணம் மேற்கண்டதுதானென்பது நமக்குத் தெரியாததல்லவெனினும், பொது மக்களுக்கே 'எங்கள் உடலும் உயிர்ப்பும்' என்று இத்தியாக புருடர்'கள் தம் பட்டமடித்துக் கொள்ளும் போதுதான் எரிச்சலும், வேதனையும் வந்துறுகின்றன! வைதீகத்தில் புரண்டு, சுயநலத்தில் தோய்ந்து, போட்டி-பொறாமை-பகைமை இன்னோரன்ன தன்மைகளால் உந்தப்பெற்ற முதலாளித்வக் கூட்டமொன்றின் பாசறையாகத் திகழுமொரு ஸ்தாபனம், நாட்டு சமூக-பொருளாதார அமைப்பில தலைகீழ் மாற்றம் செய்துவிடுமென்றோ, நியாயம், நேர்மைக்குகந்ததான சீரமைப்பு வேலைகளிலீடுபடுமென்றோ எதிர்பார்ப்பது வீணான வேலையேயாகும்.

•

அத்தகைய ஸ்தாபனமொன்று காலநிலைக்கும் கருத்து வளர்ச்சிக்கும் கட்டுப்பட்டுத்தீர வேண்டிய அவசியத்திலிருந்து தப்ப இயலாது போய் விடவே, தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு தன்னிலையைப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டிய நெருக்கடியான கட்டம் வலுக்கட்டாயமாக வந்துறவே, வேறு வகையின்றி. இந்துமதச் சட்டத்தொகுப்பு மசோதாவென்ற பெயரில், இரண்டொரு சப்பையான சீர்திருத்தங்களைச் செய்ய முன்வந்தது. அடிப்படை நச்சுஊற்றைத் தூர்க்க மல் மேலெழுந்த வாரியாக செய்ய வந்த இரண்டொரு காலங்கடந்த இத்தகு சீர்திருத்தங்களைக் கூடப் பொறுக்க முடியவில்லை ஆணவத்திரையால் உலகனைத்தும் மறைப்புண்டிருக்கும் வைதிக புரியினர்க்கு! மத்தியசட்டசபையின் கடந்தகூட்டத்தின்போது இவர்களின் சஞ்சலமும், சலசலப்பும் மெத்த இருந்ததை நேயர்களறிவர். அரியாசனத்திலமர்த்தியோரின் உருத்திரத்துக்கு' ஆட்பட்டு ஊறு விளைத்துக்கொள்ள விரும்பாத இந்தியப் பிரதமமந்திரி நேரு அவர்கள், நேற்றுக்கு முன்தினம் மத்திய சட்டசபையில் பேசுகையில் 'இந்த மசோதா நிறைவேற்றப்படுகிறதா, இல்லையா என்பதில்தான் எனது சர்க்கார் வாழுமா வீழுமா வென்பது அடங்கியிருக்கிறது உங்களுக்கு ஏற்ற முறையில் ஏதோ திருத்தங்கள் செய்துகொண்டு, எப்படியோ நிறைவேற்றித் தந்துதவுங்கள் மசோதாவை' என்று மன்றாடியுள்ளார். தினைத்துணையும் புரட்சி வாடையோ; எள்ளத்தனையும் தீவீரமணமோ வீசாத மிகமிகச் சாதாரண சீர்திருத்தங்கள் இரண்டொன்றை ஒருமனதாய் நிறை வேற்றி, மக்கள் சமுதாயத்திடையே அமுலுக்குக் கொண்டு வருவதில் இவ்வளவு திக்கு முக்காடி திணறிப்போகும் சர்க்காரொன்றின் கீழ்த்தான் நாம் வாழ்கிறுமென்று நினைக்கும்போது எவ்வளவு கவலையாகவும் எதிர்காலம் எத்துணை இருள் நிறைந்தும் காணப்படுகிறது!

வைதிக புரியினர் இவ்வளவு தூரம் கொக்கரிப்பதற்கும். அரசாங்கத்தார் இவ்வண்ணம் சமாதானத்தின் மேல் சமாதானத்தை அடுக்கிக்கொண்டு போவதற்கும் காரணமாயிருக்கும் அந்த சீர்திருத்தங்கள்தான் யாவை? ராவ்கமிட்டி அன்று செய்ததே சில சிபார்சுகள் அவைகள் தாம்! இந்து என்பவன் நஸ்திகனென்றோ. சமயக்கோட்பாடுகளற்றவனென்றோ' வர்ணாஸ்ரமக் கொள்கைகளை விடுத்தவனென்றோ விளக்கக் கூறப்படவில்லை மசோதாவில்! வர்ணாஸ்ரமத்தை அனுஷ்டிப்போர், வற்புறுத்துவோர் அரசாங்கத் தண்டனைக்குள்ளாவரென்றும் நிபந்தனை காணப்படவில்லை மசோதாவல்! ஏதோ சில பல செப்படி வித்தைகள் போல் காட்டப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தாங்கமுடியவில்லை இங்கிதம் கெட்டவர்களால்!

கூட்டுக் குடும்ப முறையில் சிற்சில மாறுதல்கள், பெண்களுக்குச் சொத்துரிமை, இருதார மண விலக்கு, திருமணத்துரிமை, சிவில் முறைத் திருமணம் ஆகியவற்றுக்கு வழியமைத்துத் தரும் மசோதாவொன்று இவ்வணுக் குண்டு காலத்தில் நிறைவேற்றப்படக் கூடியதா? ஓரிரண்டு நூற்றுண்டுக்கு முன்னரேயே அமுல் பெற்றிருக்க வேண்டிய விஷயங்களல்லவா இவை! அப்படியிருக்க. இவற்றுக்கு இக்காலத்திலும் எதிர்ப்பு. தடுத்து நிறுத்த சட்ட பூர்வமான பாதுகாப்பு இருக்கின்றனவெனில், யாரிடஞ் சென்று முறையிட்டழுவது நாம்?

இந்துமதச் சாக்கடையில் ஊறிப்போன மரமண்டைகளுக்கு, அம்மதம் இயல்பாய் போதித்த ஆணவமும் அகங்காரமுமே இன்று ஆயுதங்களாய் உதவுகின்றன வென்பது சட்ட சபையில அவை கிளப்பும் 'வெற்று வேட்டுகள்' கொண்டே தெரியலாகும். பழைய பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், நடைமுறைகள், மூதாதையர் கடைப்பிடித்தக் கொள்கைகள் அத்தனையும் பறிபோகின்றன, பாழாகின்றன வென்று ஓலமிட்டிருக்கும் இப் பிற்போக்குச் சக்திகள் மதத்துக்கு மக்களா மக்களுக்கு மதமா வென்பதையுணர்ந்ததாகச் சிறிதளவும் தோன்றவில்லை. தான் போற்றிப் புகழும் இந்து மதக்கோட்பாட்டைக் கொண்டாரே, இந்து மதத்துக்குத் தாழ்வோ தீங்கோ வருவதை எவ்வகையிலும் சகிக்காத மனோபாவத்தினரே பெரும் பாலோராக இருந்து, கால அவசிய ('விந்தியாச')த்தால் கொண்டுவர நேரிட்ட இம்மசோதாவுக்கே இடங்கொடுக்க மறுக்கும் இக்கும்பல்; யாருக்காக யார் நலத்துக்காக, பாடுபட்ட பிரதிநிதிகளாக மக்கள் மன்றிலே நாட்டிலே, நகரிலே சஞ்சரிக்கின்றார்களெனக் கேட்கிறோம். மக்கள் உரிமைப் பாதுகாவலராக ஆட்சி பீடமேறி ஆளவந்தார்கள், மக்களுக்குகந்தவையெனத் தோன்றுவனவற்றை நிறைவேற்றி அமுல் செய்செய்வதில் தங்களுக்கு நல்லெண்ணமிருந்தால் இவ்வைதீகப் பெருச்சாளிகளை 'வாய்ச்சொல்லருள்வீர்' என்று மன்றாடிக் கிடப்பதேனென்று கேட்கிறோம். நாட்டுமக்களின் பெருவாரியினருக்கு நன்மை தரத்தக்கவை, பெருவாரியினரின் ஆதரவைப் பெற்றவையென்று தெளிந்த பின்னரும் அவற்றை நிறைவேற்றுவதில் தயக்கமேனோவென்று கேட்கிறோம். நாட்டவருள் 100-க்கு 99 பேரைப் படுமோசமாகப் பாதிக்கக்கூடிய பற்பல விஷயங்களில் ஜனநாயகத்தை சிறுதுரும் பளவுக்கும் விரும்பாத அரசாங்கத்தார், இம்மசோதா விஷயத்தில் மட்டும் 100-க்கு 100 ஜனநாயகம் விழைவதில் அந்தரங்கம் நமக்குப் புலப்படவே இல்லை. வைதீகத்துக்கும் காவல்' புத்துலகுக்கும் தோழன், என்ற நிலையில் [illegible] நாளைக்குத்தான் [illegible] பெயர் சொல்ல முடியும்; நீண்ட நாளைக்கு முடியாதென்பது ஒருதலை!

'பேபி' வெடிகுண்டுகள்!

—

அருப்[illegible] உளவியாக இருக்க [illegible] [illegible] அதிக [illegible] செய்ய 'பேபி' வெடி [illegible] அமெரிக்[illegible] [illegible] [illegible] இ 250 [illegible] மேல் [illegible]

—[illegible]

சுயதேவையைப் பூர்த்தி செய்வோம்; ஆனால் சுரண்டல் ஒழியவேண்டும்

சுயதேவை பூர்த்தி சுய ஆட்சிப் பூர்த்தியாக மாறுமா ?

"பூகம்பம் ஏற்பட்டாலும் சரி, புயலடித்தாலும் சரி, எது எப்படிபோனாலும் சரி 1951-ம் ஆண்டுக்குப்பிறகு. வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருள் இறக்குமதி செய்யப்படமாட்டாது. மாகாணங்கள் தங்கம் தேவையைத்தாமே பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்" என்று பறைசாற்ற ஆரம்பித்துவிட்டார் பண்டிதர் நேரு.

அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற உணவு மந்திரிகள் மாநாட்டில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார் பண்டிதர்.

அயல்நாடுகளிலிருந்து உணவுப் பொருள் இறக்குமதிசெய்து செய்து அலுத்துப்போய்விட்டார்களாம். அதற்காகப் பொருளைச் செலவிட்டு செலவிட்டு நலிந்துவிட்டதாம் நாடு. ஆகவே, உடனடியாக உணவுப் பொருள் இறக்குமதியைக் குறைக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமாம்.

இதுதான் இந்திய சர்க்கார் நெடுநாட்களாகப் பாடிவரும் பல்லவி! அந்தப் பழைய பல்லவியைத்தான் பண்டிதர் இன்று பாடியுள்ளார். நிரம்ப சரி; அரசியலாரின் இத்தகைய சிக்கனத் திட்டத்தை வரவேற்கிறோம். ஆனால் 1951 க்குப் பிறகு நாட்டின் நிலை எப்படியிருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

பொதுவாக மத்திய சர்க்காரிடமிருந்து மாகாண சர்க்காருக்கு வருவாய்க்கு வழியில்லையெனினும், மாகாண சர்க்காரை மத்திய சர்க்கார் சுரண்டுவதில் மாத்திரம் குறைவேயில்லை போல்.

இந்நிலையில்தான் மாகாணங்கள் சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்ற உத்தரவு பிறக்கிறது. சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் விஷயத்தில் சென்னை மாகாணம் மற்ற மாகாணங்களைவிட முன்னணியில் நிற்கவல்லது என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. ஆனால் இந்த சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் திட்டம், உணவுப் பொருள் சம்பந்தப்பட்டவரையில் மாத்திரமே யென்றால், அது எப்படிப் பயன் தரும் திட்டமாகும்? மற்றப் பொருளாதார திட்டங்களில் இம்மாகாணத்தின் கைகள் கட்டப்பட்டுக்கிடக்கின்றன சுயமாக எதனையும் செய்யவோ, அதற்கென சுயமாகச்செலவிடும் சக்தியோ இம்மாகாணத்துக்குக் கிடையாது. இந்நிலையில் "உங்கள் தேவையை நீங்களே பூர்த்தி செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லப்படுமானால், "அது சரி ஐயனே, அப்படியே செய்கிறோம். ஆனால், இவ்விஷயத்தில் உங்கள் உதவி எந்த அளவில் இருக்கும்?" என்றுதான் நாம் கேட்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வது என்பது, இப்போதுள்ள பொருளாதார நிலையில் கடினமேயாகும்.' எங்கள் சுயதேவையை நாங்களே பூர்த்தி செய்து கொள்வதென்றால், எங்களை நீ சுரண்டுவதை விட்டுவிடு, எங்களுக்குச் சுதந்திரம் கொடு; அல்லது தற்காலிகமாக சுரண்டலையாவது குறைத்துக்கொள்" என்று சொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு கொடுக்கத் தொகை கொண்டிருக்கும் சென்னை சர்க்கார், நாம் மலேகே [illegible] கேள்வியை மத்திய சர்க்காரைப் பார்த்து கேட்க வேண்டும். மாகாணங்களின் [illegible] மத்திய சர்க்காரிடமே [illegible] வேண்டும் என்று சொல்லும் மத்திய ஆட்சியாளர், 1951-க்குப் பிறகு மாகாணங்களுக்கு படியளப்பது எப்படி என்பதற்குத் திட்டம் தீட்டியே ஆகவேண்டும், அது முடியவில்லையானால், அதற்கென மாகாணங்கள் தீட்டும் திட்டத்துக்கு உதவி செய்தாக வேண்டும். அதாவது 1951-க்குப் பிறகு சுரண்டல் குறைய வேண்டும். அது மட்டுமல்ல, சுய ஆட்சி முறையையும் இம்மாகாணமே பூர்த்தி செய்து கொள்ளும்படி அனுமதிப்பதே அறிவுடைமை.

அவசர நிலைமை யென்ற சாக்கில் மக்கள் உரிமையை நசுக்குவதா ?

பாக்கிஸ்தான் அடக்குமுறைச் சட்டத்துக்குக் கண்டனம்

பாகிஸ்தான் சர்க்காரின் பொது பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்து இந்து பத்திரிகையாளர் சங்கம் 27-ம் தேதி [illegible] தீர்மானமொன்று நிறைவேற்றியிருக்கிறது. இச்சங்கத்தில் காச்சிப் பத்திரிகையாளரே பெரிதுமுள்ளனர்.

"தேசீய அவசர காரியம் [illegible]" [illegible] [illegible] செய்கை [illegible] நனிக்கை செய்யவும், [illegible] [illegible] சர்க்காருக்கு அதிகாரம் [illegible] கண்டனத்துக்குரியது [illegible] சட்டத்தில் [illegible] 'அவசர நிலை' யென்ற [illegible] மக்கள் உரிமை பறிக்க படுகிறது இச் சட்டத்தை [illegible] தீர்மானம் [illegible].

இத்தகைய அடக்குமுறைச் சட்டத்தை சர்க்கார் உடனடியாக [illegible] வேண்டுமென்றும் [illegible] கேட்டுக்கொள்ளப்பட்டது.

பழைய நிலையைப் பாதுகாக்கவா பதவியேற்ருர் மந்திரிமார்?

உழைத்து உருக்குலைந்து வாழ்விழந்தோர்க்கு வகை செய்தீரா?

—————:0:—————

வாழ்க்கை அகதிகள் இங்கே நெளிய, வடநாட்டகதிகளுக்கு அன்புபசரிப்பா?

———:(0):———

திருச்சியில் தோழர் அன்பழகன் அறைகூவல்!

தலைவரவர்களே!

தோழர்களே!!

இத்தகைய சிறப்பான துவக்கவிழாவில்கலந்துகொள்ளும் வாய்ப்பளித்த தோழர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

நாங்கள் யார்?

எனக்குமுன் பேசிய நண்பர்கள், திமுக ஏன் துவக்கப்பட நேர்ந்தது என்பது குறித்து விளக்கியுள்ளார்கள். ஆனால், உண்மையை மறைப்பதற்கென்றே சிலர், தி மு கழகத்தைத் துவக்கிப் பணியாற்றி வரும் தோழர்களை—துரோகிகள், மோசடிக்காரர்கள், சுயநலக்கூட்டத்தார், பதவிப்பித்தர்கள் என்றெல்லாம் தூற்றத் தொடங்கியுள்ளனர். நாங்கள் யார்? அடியோடு இந்த நாட்டிற்கே புதியவர்களா? பொதுமக்களுக்கு எங்களைக்குறித்து எதுவுமே தெரியாதா? நேற்று வரை திராவிடர் சமுகத்தில்—முக்கியமானவர்களாகப் போற்றப்படும் நிலையில் பணிபுரிந்தவர்கள் தானே, நாங்கள்? திடீரென எப்படி இவ்வளவு கெட்டவர்களாகிவிட முடியும்? அல்லது இவ்வளவு கெட்டவர்களாகத்தான் திராவிடர் சமுகத்தில் இருந்தோமென்றால், அதன் தலைவர் இப்படிப்பட்டவர்களைத்தான் முக்கியமானத் தொண்டர்களாகக் கொண்டிருந்தாரென்றால், அவரைக் குறித்தே மக்கள் என்ன எண்ணுவார்கள். என்பதைக்கூடக் கருதாமல், எங்களைத் தூற்றுவது மல்லாந்து படுத்துக் கொண்டு மார்பிலே துப்பிக்கொள்வதைத் தானே நினைவு படுத்துவதாகும்? பொதுமக்கள் அவர்களுடைய வார்த்தைகளை அப்படியே நம்பிவிடுபவர்கள் என்று எண்ணுகிருர்கள் போலும்.

மக்கள் மன்றம் தீர்ப்புக்கூறட்டும்

உண்மையில்—ஒரு இயக்கத்தைக் குறித்து — கட்சியைக் குறித்து—மக்கள் மன்றத்திலே தீர்ப்பு வழங்கப்படுவது இயல்புதான். ஆனால் குழந்தை—பிறந்தவுடனே ஜோசியம் கூறிப் பிழைக்கும் புரோகிதர் போல, கட்சி தோன்றிய நிலையிலேயே; முனிவர்கள் சாபமிடுவார்களே அதைப்போல தூற்றத் தலைப்படுவது பண்பாகாது, பண்புடையோர் செயலுமாகாது. ஒரு இயக்கம், சில காலம் வரை — உழைத்தற்குப்பின், அந்தத் தோழர்களின் முயற்சிக்கு இடந்தந்தபின் அவர்களுடைய நோக்கத்தைக் கண்டுகொண்டு, அதன் பின்புதான்—பொது மக்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும், வர முடியும். எங்களுடைய பணியினால் பயனிருக்கிறதா? பகுத்தறிவுக் கொள்கைகள் பரவுகின்றனவா? ஏழை எளியவர் கட்குளங்கள் கொள்கைகளால் ஏதேனும் நன்மை விளைகின்றனவா? நாட்டுக்கு நல்லது செய்கின்ருேமா? என்பதைத்தான் பொது மக்கள் கண்டறிய வேண்டும்.

இயக்க முன்னணி வீரர்களே நாங்கள்!

இன்று தி. மு. கழகத்தில் உள்ளவர்களெல்லாம், தி. கழகத்தின் பணியாற்றிய போதும் முன் வரிசையிலே இருந்தவர்களேதவிர, உழைப்புக்கு அஞ்சியோ, தியாகத்திற்கு பயந்தோ. தீவிர திட்டங்களை எதிர்த்தோ—நடந்து கொண்டவர்களல்ல. கொள்கையைக் காத்து நிற்க, எத்தகைய துன்பநிலையிலும். தவறியவர்களல்ல. இன்று தி. மு. கழகத்தின் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தோழர்களும் நெடுநாளாகவே—பெயரளவிற்கு இருந்து வரும் தோழர்களும, ஆற்றல், சாதிக்க முடியாத பணிகளைச் செய்தவர்களும், பிற்போக்கு வாதிகளையும், பதவிப் பித்தர்களையும்-கழகத்தினின்றே விரட்டியவர்களும் பொம்மையான்மை யோருமாகியவர்கள் தான்—இன்று. தி மு கழகத்தைத் துவக்கியுள்ளோம்.

இலட்சியத்திற்குக் பாடுபடவே வெளியேறினோம்

பெரியார் அவர்களின் திருமணம் பொதுமக்கள் முன்னிலையில், நம்முடைய கொள்கைகளை, இலட்சியங்களை, எதிரிகள் கேவலமாகப் பேச இடந்தந்ததாலேயே, கொள்கைகளைக் காத்து, இலட்சியப் பாதையிலே வீழ்ச்சி ஏற்படாதிருக்க ஒருதனி இயக்கத்தைத் தோற்றுவிக்க நேரிட்டது. இதுகாறும், பலப்பல சமயங்களில், பெரியாரின் சர்வாதிகாரத்தை நாங்கள் சகித்துக் கொண்டு, எப்படியேனும் கொள்கைகள் வெற்றி பெற்ருல் போதும் என்று கருதியதைப் போலவே. இப்பொழுதும் நடந்துகொண்டிருந்திருப்போம், இந்தத் திருமண நிகழ்ச்சி—எங்களுக்கு மட்டும் துன்பமாக இருந்திருந்தால். ஆனால், பொதுமக்கள் கை கொட்டி நகைக்குமளவுக்கு நம்முடைய திராவிட இனத்தின் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையே இருண்டுவிடும் அளவுக்கு—நமது தோழர்களின் தொண்டே கேலிக்கு ஆளாகும் அளவுக்கு, நமது தகுதியை, கண்ணியத்தைக் குறைபடுத்த இத்திருமணம் காரணமானதாலேயே, நாம்—நமது இலட்சியங்களுக்காக, ஒரு புது இயக்கத்தைத் தோற்றுவித்துள்ளோம். இதற்குக்கூட உரிமையற்றவர்களா நாங்கள்? அல்லது—இத்துடனேயே பொது வாழ்வில் இருந்து—துறவறம் பூண்டு விடவேண்டுமென்று எதிர்பார்க்கிருர்களா?

அறிவும் அநுபவமுமே தேவை

மற்றும், தோழர் அண்ணாத்துரை, வாலிபர், இவர் எப்படி ஒரு இயக்கத்தை நடத்தலாம்? நடத்த முடியும்? என்றும் சிலர் பேசுகின்றனர். பெரியார் அவர்களோடு நோக்க அண்ணாத்துரை வாலிபர்தான். ஆனால், ஆனால் அண்ணாத்துரை அவர்களுக்கு 'திருமணம் நடந்து இருபது ஆண்டுகளுக்குமேல் ஆயிற்று. இப்பொழுதோ வயது நாற்பது. பொதுத் தொண்டிலே ஈடுபட்டு பதினறு ஆண்டுகள் ஆகிவிட்டன. சென்ற இந்தி எதிர்ப்பில் இருந்தே தளபதி என்று அழைக்கப்படுவர். இங்கிலையில வயது மட்டும்தானு தகுதியைக் காட்டுவது என்று கொள்வது? மற்ற நாடுகளில் நாற்பது ஆகாததன் முன்பே—நாட்டின் தலைவராக, முதல் அமைச்சராக, இயக்கத்தின் தலைவராக வந்தவர்கள் பலப் பலர். இந்த நாட்டிலேயே கூட, பண்டிதர் நேரு, சுபாஷ் போஸ், ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றவர்கள் எந்த வயதில் முக்கியமான தலைவரானுர்கள்? அவர்கள் ஏன்—பொது வாழ்க்கையில் ஈடுபடாமல் வியாபாரியாக இருந்த நேரத்தில்—திடீரென ஒருநாள் காங்கிரசிலே புகுந்து தலைவரானுரே, பெரியவர்கள், அது எந்த வயதில்? எனவே—வயது ஆகவில்லை—தோற்றம் பெரியதாக இல்லை-தலை மயிர் நரைக்கவில்லை—என்றெல்லாம் பேசுவது-பழமை எண்ணமே யன்றி பகுத்தறிவுப் பண்பாடு ஆகாது. அதுமட்டுமின்றி—திராவிடர் கழகமே கூட பெரியார் ஒருவரைத் தவிர்த்து—மற்ற அனைவரும் வாலிபர்களாகக் கொண்டிருந்த காரணத்தால்தான் இவ்வளவு தீவிரமாக வேலை செய்து வந்துள்ளது. பெரியார் அவர்களே— தம்மை ஒரு வாலிபர் என்றே கூறி வந்ததை யாரும் மறுப்பதற்கில்லை. உண்மையாக ஒரு நாடு முன்னேற வேண்டுமானல், அந்த நாட்டின் முக்கியமான இயக்கங்கள், அறிவும் அனுபவமும் கொண்ட வாலிபர்களால் தான் நடத்தப்பட வேண்டும் என்பது-அறிஞர்களது கருத்தாகும்.

அக்டோபர் 16!

இந் நிலையில் ஒரு வாலிபரைத் தலைவராகக்கூட அல்ல, பொதுச் செயலாளராகக் கொண்டு அவருடைய அறிவுரையின்வழி, சர்வாதிகாரமின்றி, ஜனநாயக முறையில் பணியாற்றுவது குறித்துப் பெருமையடைகிறோம்.

எனவேதான், தோழர்களே, இத்தகைய விழாக்களை—எங்களது நோக்கங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறும் நல் வாய்ப்பாகக் கொண்டுள்ளோம். அக்டோபர் 16-முதல் நமது இயக்கத்தின் சார்பில்-சமுதாயம், பொருளாதாரம், அரசியல் ஆகிய மூன்று துறைகளிலும்-நாட்டு மக்களுக்கு நல் வழிகாட்ட முயல்கிறோம்.

இன்று-நாடு மேலும் மேலும் சீரழிந்து வருகின்றது. அரசியல் இயக்கங்கள்-உளுத்துப் போகின்ற அளவுக்கு - சுயநலமிகள் புகுந்து ஆட்சி மன்றமே அவர்களின் கைப்பாவை ஆகிவிட்டது நாட்டின் நிலைவைப் போக்க, அவைகளை நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூற, விளக்கதர புது வழியைக் காட்ட இன்று எங்களைத் தவிர வேறு யார் இருக்கிருர்கள்?

என்றேனும் ஒரு நாள், ஒரு காங்கிரஸ்காரர், சட்டசபை உறுப்பினர், அமைச்சர் ஆகியோர்—இன்றைய ஆளவந்தார்களின குறைபாடுகளை—தவருன திட்டங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறியதுண்டா? எப்படிக் கூறுவார்கள்? கூறினல் எப்படி அவர்களது ஆசைகள் நிறைவேற முடியும்? கம்யூனிஸ்டுகள் கூற முடியுமா? அவர்களைத் தான் வெளியிலேயே விட்டு வைக்கவில்லையே ஆட்சி மன்றத்தார் சோஷலிஸ்டுகள் கூறுவார்களா? அவர்கள் தான் காங்கிரசின் செல்லப் பிள்ளைகளாயிற்றே? இந நிலையில் திராவிட முன்னேறக் கழகத்தினர்தானே எடுத்துக் கூறியாக வேண்டும்? எதிர்க்கட்சியாகப் பணியாற்ற வேண்டியவர்களாகிருேம்?

வாழ்க்கை அகதிகள்!

இன்று தெருவெல்லாம், ஊரெல்லாம் பிச்சைக்காரர்கள் பெருகியுள்ளனர். கூன், குருடு, நொண்டி, முடம், தொழுநோய்க்கு ஆளானோர். தொத்து நோயினர் முதலானோரும், வேலை கிடைக்காதவர்களுமாக லட்சக்கணக்கானவர்களபிச்சை எடுத்து அதைத் தம் குடும்பத் தொழிலாக, வார்சுபாத்தியதை உடையதாக நடத்தி வருகின்றனர். இதனால்—பொது மக்கள் அடையும் வேதனைக்கு ஓர் அளவில்லை. பிச்சைக்காரர் தொல்லை-பெரிய நகரங்களில் பொறுக்கவே முடிவதில்லை. இவர்களெல்லாம் நம் நாட்டிலே பிறந்தவர்கள் தானே? வாழும் உரிமை கூட இவர்களுக்கு இல்லையா? வடநாட்டு அகதிகளைவிட, இந்த வாழ்க்கை அகதிகள்- எந்த விதத்தில் வேண்டாதவர்கள்' இவர்களை இப்படியே விட்டு வைப்பது-சமுதாய வாழ்விற்கே ஒரு பெருங்கேடு அல்லவா? இவர்களுள் உடல் வலிவுள்ளவர்களுக்கும் உழைக்கக் கூடியவர்களுக்கும் வேலை தந்து. நோயாளிகளுக்கு உதவி தந்து, ஏன் இவர்கள் பிச்சை எடுப்பதைத் தடை செய்யக்கூடாது அரசாங்கத்தினர்? இது முடியவில்லை என்றால், ஆளும் தகுதி அவர்களு[க்கு] இல்லை என்று தா[னே] அர்த்தம்?

நாட்டின் உயிர்நாடி[யாக] அமைந்துள்ள, உழவ[ர்கள்] விவசாயிகளின் வறு[மை] துன்பம் அளவிட்டுக் [கூற] முடியாது. அவர்கள் வ[...] தால்தான் நாடு வாழமுடி[யும்] ஆனால் அவர்களே [...] கள். 'கிசன் இயக்க[ம்]' என்ற பெயரால் [...] நசுக்கப்படுகின்றனர்.

எதிர் காலம் இருள்கிறது!

நாட்டின் தேவை[...] பூர்த்தி செய்யும் தொழி[லாளர்] களை-தங்களுடைய [...] களை, நிரபபிக்கொள்[ள] வழியற்றவர்களாக வ[...] கின்றனர், அவர்க[ள்] நியாயமான உரிமைகளு[க்காக] வாய்திறந்தால், குரல் [...] யிலே வரக் கண்டால், ப[லாத்]காரம் என்ற பெயரால்வ[...] கப் டுகிருர்கள்.

நாட்டின் பழம் [...] தொழிலாளர்களான — ' [...] வாளிகள்' அல்லும் ப[கலும்] பாடுபட்டு ஆடைநெய்[து] வாங்குவோரின்றி வறு[மை]க்கு ஆளாகின்றனர். [...] தெரிந்தவர்கள்தான், [...] லும் வாழும் வகை இ[ன்றி] தவிர்க்கின்றனர். அவர்[கள்] குடும்பங்களிலே பலர் [...] பட்டினிக் கொடுமை[க்கு] ஆளாகியுள்ளனர்.

வேலை செய்யும் இவ[ர்கள்] நிலையே இவ்வாறிருக்க, [வேலை] யற்றோர் திண்டாட்டம். பட மனமிருந்தும் வழி [...] தாரின் துன்பம் அ[...] நிரைக்க முடியாதது. [...] றைய போக்கில், மே[...] மேலும் வேலையற்[றோர்] தொகை பெருகிக்கொ[ண்டே] போகும் என்பதை எண்[ணும்] போது—எதிர்காலம் [இருள்] கிறது

கல்வியிலே மிகவும் [பிற்] போக்கிலே உள்ள[...] நாம். இங்கே பயிற்சி [...] ஆசிரியர்கள் கிடை[ப்பது] அருமையாக இருக்கிற[து]. ஆனால், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், பெ[ண்] கப் பிற ஆசிரியர்களு[க்கும்] கிடைக்கும் சம்பளமோ, [...] ரியர் ஒருவரின் செலவ[ுக்கு] தான் போதுமானதாக [இருக்]கிறது? அவரது மனைவி [மக்] களெலாம் எப்படிப் பிழ[ைப்]பது என்று அரசாங்கத்[தார்] கருதுகிருர்களோ தெ[ரிய]வில்லை.

வறுமைத் தேள் கொட்டுகி[றது]

அரசாங்கத்தாரின் [...] வலிலே உள்ள, குமாஸ்[தா] கள், கிராமக் கணக்கர்[கள்] வேலைக்காரர்கள், போ[லீஸ்] காரர்கள்போன்ற பலதிறத்[தா] ரும்,போதுமானஊதியமி[ன்றி] வாழ்க்கையிலே வறுமை[த்] தேளின் கொட்டுதலு[க்கு] ஆளாகித் துடிதுடிக்கின்ற[னர்]. பொதுவாகவே-நடுத்தரகு[டும்] பத்தினரின் வாழ்வு-வருவ[ாய்] குறைந்து வாழ்க்கைச்செ[லவு] பெருகி-துயரத்தில் மூ[ழ்கி] யுள்ளது.

இங்கிலையில் — நாட்டி[ல்] போதுமான 'உணவு' [...] விக்க வகையில்லை பலன் [...] கூடிய திட்டமில்லை. [...] நாட்டு உணவுப் பொ[ருட்] கள்-விலையோ அதிகம் [...] பதோ நிச்சயமில்லை. இ[...]

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்[க்க]

...ழைய நிலையைப்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் இடையிலே ...ழக்கம் குறைந்து ... வேகத்தைவிட, ...வாக உணவுப்பொருள் ...விலே ஏறிக்கொண்டே ...கின்றன. பொது ...ன் கூக்குரல் கேட்டு ...றைப்பதாகக் கூறும் ...லார், உணவுப் ...னை நெருங்கியவுடன் ...யோ எண்ணி வாய் ... கலங்குகின்ற ...வ்வாறுனால் உணவுச ...சையின்றி மக்கள் ...ன்பம் எப்படிக் குறை

...வைப் பெருக்க இன்றி ...யாத நீர்ப்பாசன வசதி ...நாட்டில் இல்லை. நீர்த் ...ங்களை அமைக்க-போது ... பணமில்லை என்று ... திட்டங்களிலே ...ல ...றையே கைவிட்டு வருகின் ... மக்கள் தொகையே ...கிவரும் இந்நாளில், எப் ...தான் போதுமான உண ...பொருள் கிடைக்கச் செ ...ளை தெரியவில்லை.

...ரசர்கள் ஆசைக்குரியோர்!

...டிலே உள்ள ஆலை ...லாம் முதலாளிகளுக்கே ... மானவை. அதிலே ...க்கும் தொழிலாளர், ...ட்டும் டலன் காண்ப... முதலாளியே -ஊனது ... லாபத்தில் சிறு ... காணப்படாலு... என்று கூறி - ஆள் ...ப்பு. ஆலை அடைப்பு- செயல் புரிகின்றனர். ...ங்கத்தார் -உற்பத்தி ...வேண்டும் என்று ... அதே நேரத்தில், ...யை அடைத்துவைக்கும் ...ளிகளை மட்டும் அர...தாருக்கு அசட்டிக் ...பணமில்லை இவ்வாறு ...உற்பத்தி பெருகுவது ...? மறற நாடுகளோடு ...க இங்கு ஆலைத் தொழிலை ...க்கும் தனிப் பெரு ... போதுமான அளவு ...டி எடுக்கப்படவில்லை ...நாட்டிலே ஏராளமான ... பொருள்கள் உண்டு, ...த வெளியில் கொண்டுவர ...யான முயற்சி இல்லை. ...மில்லை. ஆலைத் தொழில் ...தும் அரசாங்கத்தின் ...மையாக்கப்பட... ...ரு. அதன் மூலம் பலனை ...கண்டு தனிப் பொருள் ...த் தோண்டி எடுப்பதற் ...திட்டம் வகுக்க வேண் ...அவசியத்தை அரசாங்கம் ...ரும். இன்றோ ஆலை முத ...களின் ஆசைக்குரியவர் ...கவன்றோ அரசாங்கத் ...உள்ளனர்?

...லே' பாடம் ஓயாதா?

...ந்நிலையில்—நாட்டு மக் ...பிளேக், காலரா போன்ற ...நது நோயகளுக்கும், ..., ஆஸ்துமா, தொழு ... போன்ற கொடு நோய ...கும் ஆளாகி வருகின்ற ... பல இலட்சக்கணக ...மக்கள் ஆண்டு தோறும் ...நாய்கட்குப் பலியாகின் ... இவர்களுக்கு ... ...சதி செய்ய, காத்துதவ ...சாங்கத்திடம் திட்ட ... கேட்டால் ...ணம். ... என்ற ஒரே பதிலைத ...கூறுவர்.

...ரங்களில் வாழும் மக்க ...ப் போதுமான வீடுகள்

இல்லை. ஏனழைகளுக்குக் குடிசையும் இல்லை. பலருக்குக் குந்த இடமும் இல்லை 'சுகாதாரம்' தலைகாட்ட முடியாதபடி சாக்கடை ஓரங்களில் மக்கள் வசிக்கின்றனர் நாட்டிலே—போதுமான சாலைகள் இல்லை. 'ரயில்வே' போக்குவரத்து பெரும்பான்மையோருக்கு வசதியற்றதாகவே இருக்கிறது. கால்வாய்கள் தூர்ந்துகிடக்கின்றன. போதுமான பள்ளிக்கூடங்கள் இல்லை. கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை, நாட்டுப்புறங்களில் வைத்திய உதவி இல்லை—ஏழைகட்கோ, குடிக்கக் கூழும் இல்லை, சுட்ட கந்தையும் இல்லை, குந்தக் குடிசையும் இல்லை. இந்த நிலையில் நாட்டை அப்படியே பாதுகாத்து வருகின்றார்கள் நமது ஆளவந்தார்கள். இந்நிலை மாறவேண்டாமா?

நிதைமாற்றத்தான் போலும் தியாகிகளுக்கு நிலதானம் செய்து வருகின்றார்கள் அரசாங்கத்தார். அதிலேயும்—தியாகம் செய்து சட்டசபை உறுப்பினர்களாக ஆனவர்களுக்கும், தியாகப் பரிசு அளித்துள்ளனர் அதிலும்—அதிக சொத்து காரணமாக மேல் சபை உறுப்பினர்களாக வந்தவர்களுக்கும், மந்திரிகளாக இருந்தவர்களுக்கும் இருப்பவருக்கும் கூட பல ஏக்கர் நிலம் பரிசாகத் தரப்பட்டுள்ளது. நாடு முன்னேறுவதற்கு வேறென்ன சான்று வேண்டும்?

அவர்களுக்கு என்ன நஷ்டம்?

உழவர்களின் நன்மைக்கா-ஜமீன் இனம் ஒழிபு என்றனர் ஆளவந்தார் எல்லோரும் ஆதரித்தோம் பார்ப்பனர்கள் ஒரே மூச்சாக எதிர்த்ததாலேயே இனு... ஒழிப்பைத் தள்ளி வைத்து ஜமீன் ஒழிப்பை மட்டும் கைக்கொண்டனர். அதற்கும், நஷ்டஈடு கொடுக்கத்தேவையில்லை என்று, பல கட்சியினரும் ஒரு முகமாகக் கூறினார்கள். ஆனாலும், ஏழைகளின் உழைப்பை உறிஞ்சிக் கோலாகல காட்டு வாழ்க்கை நடத்திய உத்தமர்களுக்கு எப்படியும் நஷ்டஈடு கொடுத்தே தீருவது, என்று தீர்மானித்துள்ளனர். அவர்களுக்கு என்ன நஷ்டம் என்பது நமக்குப் புரியவில்லை. ஆனால் உழைத்து உருக்குலைந்து, வாழ்விழந்து தவிக்கும் உழவர்கட்கு என்ன நஷ்டஈடு தரமுன் வருவார்களா இவர்கள்? முடியுமா இவர்களால்?

அரசாங்கத்தார் மதுவிலக்கை அமுல் நடத்துகிறார்கள். ஆண்டுக்கு 7-கோடி ரூபாய் வருவாய் போயிற்றே தவிர-பலனுண்டா என்பது சந்தேகந்தான்-என்ற விதத்தில்-மது விலக்குக்கு-ஒரு புது விலக்குச் சட்டம் கொண்டு வருகின்றனர் இராணுவ அதிகாரிகளும், டாக்டர்களும் லைசென்சு பெற்று-மதுவருந்த அனுமதி அளிக்கின்றனர். அந்த லைசென்சு ஏன் மற்றவர்களுக்கும் அளிக்கப்படக்கூடாது என்று பிரபுக்கள் கேட்கத்தொடங்கினர், நாளடைவில் ஒப்புக்கொள்ளப்பட்டால் வியப்படைவதற்கில்லை.

ஒரு வேளை, 'மதுவிலக்கு' மந்திரி அளவிலே நிறைவேறினாலே போதும் என்ற நிலை பிறந்தாலும் பிறக்கலாம்.

திருத்தமா, குழப்பமா?

குதிரைப் பந்தயத்தை ஒழிக்க ஒரு சட்டம் கொண்டு வந்தனர். ஆண்டு தோறும்-குதிரைப் பந்தயம் நெருங்கும் சமயத்தில் சட்டம்—தள்ளி வைக்கப்பட்டுக் கொண்டே வருகிறது பொது மக்கள் கண்மூடித்தனமாக, அதனுல் அடையும் கஷ்ட நஷ்டங்களை கண்டும், இன்னும் தடை செய்யாமல் இருப்பதானது, ஓடும் பந்தயக் குதிரைகளுக்கும், மந்திரிகட்கும் ஏதேனும் சொந்தம் இருக்குமோ என்று கூட மக்கள் கருத நேரிடுகிறது.

இப்படிச் செய்ய வேண்டியவைகள் பலவிருக்க, இருக்கின்ற கல்வி முறையைத் திருத்துவதாகக் கூறி-கல்வி முறையையே குழப்பி வைத்துள்ளனர். போதுமான பள்ளிக்கூடமும், பயிற்சி ஆசிரியர்களும், படிப்பதற்கு வசதியும் இல்லாததோடு, நூற்றுக்கு பதினைந்து பேர்களுக்கு மட்டுமே கையெழுத்துப் போட தெரிந்துள்ள நாட்டில், கையிலே பணமில்லை என்று விரித்துக்காட்டியபடி, கல்வி முறையை மாற்றுவதாகக் கூறிக் கொண்டு, தாய்மொழிக்கு முதலிடம் என்று பெயரளவில் கூறி, ஆங்கிலத்தையும் அலட்சியப்படுத்தும் முறையில் ஒதுக்கிவைத்து, இந்தியை இடையில் புகுத்தி; அதைக் கட்டாயபாடமாகவும் ஆக்கியுள்ளனர். இது நியாயமா? அல்லது அவசியமா? என்று கேட்கிறோம்

அமைச்சர்கட்கே திறனில்லை!

குழந்தைகளோ மூன்று மொழிகளைப் பயில முடியாது? ஆங்கிலமோ அறிவை வளர்க்க அவசியம்? அமைச்சர்களிலே சிலருக்கு இந்தியைப் பயில திறனில்லாத போது—ஏழைக் குழந்தைகளுக்கு, அதிலும் மற்றொரு உளமுள்ள தாய்மொழியைக் கொண்ட மக்களுக்கு, இந்தியைப்பயில்வது எப்படி இயல்வதாகும்? அப்படிப் பயின்றால்தான் என்ன பலன்? எல்லோரும் அகதிகளாக வடநாடு சென்றாலொழிய என்ன பலன் கிடைக்கும்? இப்பொழுதே-அங்கே அலுவலில் உள்ள தென்னாட்டார் மீது வடநாட்டாருக்குப் பகை? மேலும் இடம் பெறலாம் என்று கனவுகானவாச் செய்கின்றனர் அமைச்சர்கள்? சொந்தநாட்டில் வாழ்விழந்து சோற்றுக் கிண்ணத்தோடு வடநாடு செல்லும் உணர்ச்சியை வளர்க்கத்தானா இந்தி போதிக்கப்பட வேண்டும்? இந்தியிலே இலக்கியம் உண்டா? கலை உணர்ச்சிக்கு இடமுண்டா? அல்லது அம்மொழியினருக்குத்தான் தமிழரைப்போல் உயர்ந்த பண்பாடு உண்டா? பின் ஏன் அம்மொழியைப்பேசும் வட்டாரங்களாகிய மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம், பீஹார் ஆகியவற்றிலேயே அம்மொழியை 'தந்தி' முறையில் பயன்படுத்துவதற்கு அவர்கள் ஆதரவில்லை என்று இன்றைய செய்தி தெரிவிக்கின்றது.

இந்தியில் தந்தியனுப்ப ஆதரவில்லை, என்றது. ...பில் மத்திய மாகாணம் பீஹார், ஐக்கிய மாகாணம் ஆகியவற்றில், தந்திகளை, இந்தியில், தேவநாகரி எழுத்துக்களில், அனுப்புவதற்குச் செய்த பரீட்சார்த்த ஏற்பாடு பொது மக்களிடமும், இந்திப் பத்திரிக்கைகளிடமிருந்தும் குறிப்பிடுவதற்கியலாத குறைந்த அளவே ஆதரவு பெற்றுள்ளது. இந்த-தபால் நிலயங்களில் அனுப்பப்பட்ட இந்தி தந்திகள்—மொத்த தந்திகளில் நூற்றுக்கு ஒன்றுகூட இல்லை இந்தி பத்திரிகைச் செய்தித் தந்திகள் அடியோடு இல்லை என்றே தெரிகிறது லக்நௌக்கும்-கான்பூருக்கும் இடையில் இந்தி தந்திகள் விரைவாகச் செல்ல வசதி செய்தும், வியாபாரிகளும், மற்றவர்களும் ஆங்கிலத்தையே பயன் படுத்துகின்றனர்.

வழக்கில் வராத இந்தி...!

அதுமட்டுமின்றி, இந்தி சாகித்ய சம்மேளன நிர்வாகிகளே, ஐக்கிய மாகாணத்திற்குள்ளே-தந்தி அனுப்பும்போதும் ஆங்கிலத்தையே கையாண்டுள்ளனர், என்றும் தெரிகிறது" இவ்வளவும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் காணப்படுவதாகும் இந்நிலையில், சாதாரண வியாபாரச் செய்திகட்குக் கூட வடநாட்டில வழக்கில் வராத இந்தி மொழி-இங்கே கட்டாயப்படுத்துவதில் அர்த்தமிருக்கிறதா, என்று எண்ணிப் பாருங்கள். அவர்களாலேயே பெரிதும் பயன்படுத்தப்படும் ஆங்கிலத்தையே—பொது மொழியாகக் கொண்டால-என்ன கேடு நேரிட்டுவிடும்-என்று கேட்கின்றோம்.

சாதாரணமாக-ரயில்வே நிலையங்களின் பெயர்களைக்கூட, முதலில் இந்தியிலும், இரண்டாவதாக ஆங்கிலத்திலும், மூன்றாவதாகத் தமிழிலும் எழுதத் தொடங்கியுள்ளனர். இங்கேயுள்ள மக்களுக்குத் தமிழ்தான் தெரியுமே தவிர பிறமொழிகள் தெரியாது ஆனால் தமிழுக்குத்தான் கடைசி இடம். இதிலிருந்தே, 'இந்தியை' ஆதிக்க மொழியாகத்தான் ஆளவந்தார்கள் கொண்டுள்ளரேயின்றி, பயன் கருதியல்ல என்பது விளங்கவில்லையா?

மேலும், இக்கழகம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ... பொழுது நடத்தாததாலேயே, இனி இஷ்டப்படி ஆதிக்கம் செலுத்தலாம் என்று அமைச்சர் எண்ணிவிடவேண்டாம். பொதுமக்கள் விழிப்படைந்து வருகிறார்கள். மொழி உரிமைக்கான போர்-எந்த ரூப

...ங்கே ...-மிகையை ... பலா... எச்சரிக்க விரும்புகிறேன்.

இப்பொழுதே 'அமைதிபாதுகாப்புச்சட்டம்' கொண்டுவந்துள்ளனர்; அரசியல் இயக்கங்களையே-நினைத்தபோது ஒழித்துவிடவும் செய்யத் துணையாக பலாத்காரம் வளருவதற்காக எல்லா விதத்திலும் காரணமாக இருந்து கொண்டு, அதே காரணத்தால், நம்மிடம் படைபலம் இருக்கின்றது நாள்-அவரையும் உள்ளே அடைத்து விடுகின்றன, விசாரணைக்குக்கூட இடமில்லாமல் இன்று கம்யூனிஸ்டுகள், நாளை யார், யாரோ, நாமறியோம். இதற்குப் பெயர்தான் 'சுதந்திர சர்க்காரின் ஜனநாயக ஆட்சி.

மேற்குவங்கத்திலும்கூட விருந்த உலக அமைதிப் பாதுகாப்பு மாநாட்டுக்கு பலவிதமான தடைகள், தொல்லைகள் விளைவிக்கப்பட்டன. 'அமைதியைப் பாதுகாக்க மாநாடு கூடாது, ஆனால் சட்டம் அவசியம்' என்ற போக்கிலே ஆட்சி நடக்கிறது.

மாற்றுக் கட்சியினரின் கருத்துக்கள் பரவுவதால்தான்—மக்கள் மனதிலே இருக்கின்ற ஆத்திரம் மறைந்து, குழப்பம் நீங்கி, ஒரு தெளிவு—நம்பிக்கை ஏற்படும். அப்பொழுதுதான் மக்கள் தமது சர்க்காரின் மூலமாக நல்வாழ்வு பெறமுடியும். அதற்குச் சந்தர்ப்பம் அளிக்காமல், மாற்றுக் கட்சியினரின் கருத்துக்கள் பரவுவதைக் கண்டு அஞ்சி, புத்தகத் திற்குத் தடை, பத்திரிகைக்கு ஜாமீன், அச்சகத்திற்கு அபராதம், நாடகத்திற்குத் தடை, கூட்டத்திற்கு 144, மாநாட்டிற்கு அனுமதியில்லை என்றால், மாற்றுக் கட்சியினர் மிகப் பாடுபட்டு அமைதியை நிலைநாட்டினாலொழிய—பலாத்காரம் உருவெடுக்காமல் என்ன செய்யும்?

இந்நிலையை சிந்திக்காமல்-வெளிநாடுகளிலே நம் மக்கள் படும் அவதியை, இலங்கையிலே உரிமை பறிபோவதை, தென் ஆப்பிரிக்காவிலே வதைபடுவதை, மலேயாவிலே வாழ்விழப்பதைக் கவனிக்க முடியாத ஆளவந்தார், அவற்றிற்கெல்லாம் மத்திய சர்க்காரைக் காட்டி, மற்றவற்றிற்கெல்லாம் துப்பாக்கியை நீட்டினால் மக்கள் நிலை என்னவது?

மத்திய சர்க்காரோ. ஆட்டம் ... வாழ்வின் ... ஆரியாகத் ... முதல ... ...சாய்கை. ... ...தாதவர்களெல்லாம், ...ழ்கை நடத்துகிறார்கள். ஏழைபாட்டாளிகளின் ..., ... செழிக்கும் ... ... நிதிகள் ... ... வண்ணம், ...

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

வெளிவருகிறது!

"புராக்ரஸ்"

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர்: C. N. அண்ணாத்துரை M.A.,

தனிப் பிரதி அணா 1. — வருடசந்தா ரூ. 3

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்ட்டுகள் தேவை

விவரங்கட்கு:—

"மாலை மணி" பதிப்பகம்,

சென்னை—1.

சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகிகள் தேர்வுக் கூட்டம்

4—12—49 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு சென்னை மண்ணடி முத்துமாரி செட்டித் தெரு 2/45, கழகக் கட்டிடத்தில், சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் தேர்தலும், மாகாணக் கழகத்திற்கு சென்னையின் சார்பாக பிரதிநிதிகள் தேர்தலும் நடைபெறும்.

சென்னையிலுள்ள தி. மு. க. கிளைக் கழகத்தினர் மாவட்டக் கழகத்திற்கென, தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டுபேர் விதம் உள்ள உறுப்பினர்களை, அவசியம் அனுப்பிவைக்கக் கோருவதோடு, மாவட்டக் கழகத்திற்கென இரண்டு உறுப்பினர்களை இன்னும் தேர்ந்தெடுக்காத கழகத்தினர் உடனே ஆவனசெய்து, தங்கள் உறுப்பினர்களையும் ஷை கூட்டத்தில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டுகிறேன்.

கே. கோவிந்தசாமி,
அமைப்புக் குழு உறுப்பினர்
சென்னை மாவட்டம்.

மரமண்டைகளும்....

[1 பக்கம் தொடர்ச்சி]

...தால். அல்லது கோவில், குளம் ஆற்றங்கரை முதலியவிடங்களுக்குப் போய் கடவுள்பெயரால் மக்களை ஏமாற்றுபவர் யார் என்பதைக் கண்டுவரட்டும். அதன்பிறகு சொல்லட்டும் நாட்டிலே கடவுள் பெயரால் மக்களை ஏமாற்றுபவர் இருக்கின்றனர் என்ற பிரசாரம் பொய்யா மெய்யா என்று. இவற்றாலும் விளக்கம்பெற முடியாத நிலையில் அமைச்சர் இருப்பாராகில் அவர் கல்வி அமைச்சராயிருக்க அருகதையற்றவர் என்றே சொல்ல வேண்டியவர்களாகிறோம்.

அடுத்து, "ஆரியர் திராவிடர் பிரச்சனையைச் சிலர் கிளப்பி விட்டிருக்கிறார்கள். ஆரியர் யார்? திராவிடர் யார்? என்கிறார். இது அமைச்சர் அறிந்தும் அறியாதவர் போல் பேசும் பேச்சு. ஆரிய திராவிட பிரச்னை கடந்த பத்தாண்டுகளாகப் பேசப்பட்டு, விளக்கப்பட்டு, கேள்விகளுக்குப் பதிலிறுத்தப்பட்டு அதற்குமேல் அமைச்சரைப் போன்ற மேதைகளை பேச முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும் பிரச்னை எனவே, இதற்குமேலும் விளக்கம்தர நாம் விரும்பவில்லை, ஆனாலும் சுருக்கமாக ஒரு சில சொல்லவிழைகிறோம். இந்நாட்டு மக்களிடையே பிறப்பிலே உயர்வு-தாழ்வு, மூட நம்பிக்கை, முதலியன தோன்றியதற்கு ஏதோ ஒன்று காரணமாக இருக்கவேண்டுமல்லவா? அந்த மூல காரணம்தான் 'ஆரியம்' என்கிறோம நாம. இந்த ஆரியத்தால் சுரண்டப்பட்டு, இன்று அதனின்று மீள வழி தேடும் பிரச்னைதான் திராவிடம், திராவிட நாடு என்ற பிரச்னைகளாகும். இதனாலும் அமைச்சருக்கு அறிவு விளக்கம் ஏற்படவில்லையானால் தயவு செய்து அவர் தனது இளமைப் பருவத்துக்குத் திரும்பி, பள்ளிப் பருவத்துக்குள் நுழைந்து ஐந்தாம் பாடப் புத்தகங்களைப் புரட்டிப் பார்க்கட்டும். அதிலே காணலாம் ஆரியர் யார், திராவிடர் யார் என்ற பிரச்னையை. அவரது பேச்சுக்கு அறியாமையே காரணமானால் இப்பணிகளையே மேற்கொள்ளட்டும். அன்றி அகம்பாவமோ, ஆணவமோ, அதிகார போதையோ, பித்தலாட்டமோ காரணமானால் எதிர்காலத்திடமிருந்து ஏற்ற பரிசு பெறட்டும்.

இவை அனைத்தும் ஒரு புறமிருக்கட்டும். அவருக்கும் நமக்கும் பொதுப்பிரச்னையாக விளங்கும் நாட்டுப் பிரிவினைக்கு வருவோம்.

"தமிழ்நாடு இந்திய யூனியனிலிருந்து விலகி தனித்து இருக்க முடியாது"

"திராவிடஸ்தான் கோஷத்தில் அர்த்தமே கிடையாது" என்கிறார்.

அர்த்தமே இல்லாத ஒரு விஷயத்தைப் பற்றி அமைச்சர் இங்ஙனம் அடுத்தடுத்து செல்லுமிடமெங்கும் ஏன் புலம்பித் தவிக்கிறார்? அர்த்தம் வெளிப்படுகிறதே என்ற அங்கலாய்ப்பா? அல்லது அர்த்தம் நிறைந்த இந்தப் பிரச்னையை அர்த்தமற்றதாக்கி விடலாம் என்ற அறியாமையால் இங்ஙனம் பேசுகிறாரா? அல்லது அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள இப்படி ஏதேனும் அர்த்தமற்ற பேச்சு பேசுகிறாரா? என்ன அர்த்தத்தில் இவர் இப்படிப் பேசுகிறார்; இல்லை — பிதற்றுகிறார்?

திராவிடநாடு பிரிய வேண்டியதற்கான காரணங்களை அடுக்கடுக்காய் ஆயிரமாயிரம் மேடைகளில், பல்லாயிர மக்களிடையே—இன்றல்ல நேற்றல்ல, பல ஆண்டுகளாக—விளக்கிவந்திருக்கிறோம்—வருகிறோம். அதுபோலவே பல ஏடுகள் மூலம் மரமண்டைகளுக்கும் உறைக்கும்வண்ணம் தெளிவுபடுத்தி வருகிறோம். அதிலும் தி. மு. கழகம் தோன்றியபிறகு இந்த விளக்கம் நன்றாகத் தீட்டப்பட்ட வைரமென ஒளி வீசுகிறது நாட்டிலே.

இப்படிப்பட்ட நிலையிலே தான், அதாவது திராவிட நாட்டுப் பிரிவினை பிரச்னை முற்றிக் கனிந்திருக்கும் வேளையில் "அது அர்த்தமற்ற பிரச்னை" என்கிறார் அறிவுடைய அமைச்சர்!

திராவிடநாட்டுப் பிரிவினைப் பிரச்னை அமைச்சர் மாதவனாருக்குச் சரிவர புரியவில்லையானால் அவர் புரிந்துகொள்ள மேலும் ஒரு வழி காட்டுகிறோம். தோழர் மதவனார்தனக்கும், நிதிஅமைச்சர் கோபாலருக்கும் ஓய்வு கிடைக்கும் வேளையாகப் பார்த்து கோபாலருடன் இம்மாகாண நிதி நிலைமை பற்றியும், அதற்குக்குரிய காரணங்களைப்பற்றியும் சற்று உரையாடிப் பார்க்கட்டும். அப்பொழுது தெரியும் மத்திய அரசாங்கத்தினால் மாகாண அரசாங்கம் எப்படி சுரண்டப்படுகிறது என்பது. அது தெரிந்தால்போதும்; பிரிவினை பிரச்னையில் அர்த்தம் உண்டா இல்லையா என்பது. தானாக விளங்கிவிடும்.

மேலும் அமைச்சர் பேச்சில் தமிழைக் காப்பாற்றுவதாகச் சொல்வோர் கம்பராமாயணத்தைக் கொளுத்துகிறார்கள் என்கிறார். இதற்குச் சுருக்கமாக விடை தரவேண்டுமானால் தமிழ்மட்டும்மல்ல; தமிழர், தமிழ்நாடு, தமிழ் கலாச்சாரம் இவை அனைத்தும் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காகவே கம்பராமாயணத்தைப் பகிஷ்கரிக்கிறோம். பகிஷ்கரிப்பதன் அறிகுறிதான் கொளுத்துதல் காங்கிரசார் அன்று பல் துணியைக்கொளுத்தவில்லையா அதுபோல. இதற்கு விளக்கம் பற்பல சமயம் தந்திருக்கிறோம். மற்றோர் சமயம் வேண்டுமானாலும் தருகிறோம். மாதவனார் மீண்டும் நமது சிக்கலைப் போவார், அப்பொழுது எல்லா சிக்கலையும் அறுத்து அமைச்சருக்கு அறிவுறுத்துவோம் என்று கூறி இன்று இத்துடன் நிறுத்துகிறோம்.

மதச் சார்பற்ற சர்க்காரல்லவா!

புது டில்லி, நவ 30—
சர்வ தேச சர்வமத மாநாடு ஜனவரி 6-ந்தேதி புது டில்லியில் நடைபெறவிருக்கிறது என்றும், இதில் கலந்துகொள்ள கவர்னர் ஜெனரல் இராஜகோபாலாச்சாரியார் இசைந்திருக்கிறார் என்றும் அம்மாநாட்டின் காரியதரிசி தெரிவிக்கிறார்.

இம்மாநாடு மூன்று நாட்கள் நடைபெறவிருக்கிறது. உலகிலுள்ள பல மதங்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் இதில் கலந்துகொள்ளவிருக்கின்றனர். இந்திய மந்திரிசபையில் பலரும் இதில் கலந்துகொள்கின்றனர். —ஞுளோப்.

திருமணம்

கோவில்பட்டி, நவ. 25—
இவ்வூர் தோழர் டி. நடராசன் அவர்களுக்கும், தோழியர் பத்ரகாளி அம்மைக்கும் 24—11—49ல் கோவில் பட்டி மணமகன் இல்லத்தில் தோழர் ஈ. வி. ஏ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் திருஞானசம்பந்தம், செல்லையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம், நன்றி! (ஆ-ர்)

ஏஜண்டுகளுக்கு

பில் கிடைக்கப்பெற்ற ஏஜண்டுகள் தங்களுடைய பாக்கியை தவறாது 7—12—49க்குள் அனுப்பித்தரும்படி கேட்டுக்கொள்கிறோம். அனுப்பத் தவறும் ஏஜண்டுகளுக்குக் கண்டிப்பாக பத்திரிகை நிறுத்தப்படும்.

மானேஜர் 'மாலைமணி'

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

2–12–49

கணியூர் :— இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்.

3–12–49

புளியமங்கலம் (அரக்கோணம்):- என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து, என். சஞ்சீவி.

4–12–49

கும்பகோணம்:— சி.என். அண்ணாத்துரை, ஈ வெ கி. சம்பத், பி, பழனிச்சாமி, வி. சின்னத்தம்பி, கே. கே. நீலமேகம்.

கிருஷ்ணாம்பேட்டை (சென்னை):- கே. அன்பழகன், சி. பி.சிற்றரசு, என். ஜீவரத்தினம்.

விற்பனை வரிமூலம் ரூ 16-கோடி! "காமதேனு"வின் கருணையாம்!

—(9)—

நிதி அமைச்சர் கொள்ளும் மகிழ்ச்சி!

'விற்பனை வரியிலிருந்து இந்த வருஷத்தில் ரூ 16 கோடி வருமானம் கிடைக்குமென்று தெரிகிறது. ஆகையால் சர்க்காருடைய காமதேனுவின் அனுக்கிரகம் பூராவாகக் கிடைத்திருக்கிறது''

நிதி மந்திரி கோபால் ரெட்டியார் மேற்கண்டவாறு தனது நம்பிக்கையைப் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சரின் இத்தகைய நம்பிக்கையைக் கண்டு நாமும் மகிழ்கிறோம். ஏன்? இப்படிப்பட்ட காமதேனுவைக் கண்டு பிடித்தனரே என்பதற்காக!

'காமதேனு' என்று அமைச்சர் குறிப்பிடும் வரிமூலம், திராவிட மக்களின் வியர்வைத் துளிகளின் சேர்க்கை என்றால் மிகையாகாது. ஏனெனில், விற்பனை வரி என்பது வியாபாரிகள் ஏழை எளியோர்களிடமிருந்து வசூலிக்கும் தொகையேயாகும். ஏழைகளிடம் வாங்கி சர்க்காரிடம் தருகின்றனர் முதலாளிகள். இதனை விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் 'விற்பனை வரி' என்று சொல்லுவதைவிட 'வாங்குவோர் வரி' என்றே சொல்ல வேண்டும்.

இங்ஙனம் சர்க்கார் வியாபாரிகள் என்னும் ஏஜெண்டுகள்மூலம் பொதுமக்களிடமிருந்து திரட்டும் 16-கோடி ரூபாய் மீண்டும் இதே பொதுமக்கள் நலனுக்குப் பயன்படுமா என்பதுதான் நாம் கவனிக்கவேண்டிய விஷயம். அப்படிப் பயன்படுத்தப்பட்டால் தான் நாடு நலம்பெறும், நடப்பது சுதந்திர ஆட்சி என்பதும் அப்பொழுதுதான் பொருள் காணமுடியும். இல்லையேல் அமைச்சர் கூறும் காமதேனு இம் மாகாண மக்களுக்குக் காமதேனுவாகக் காட்சியளிக்காது. காளிங்காபாகத்தான் காட்சியளிக்கும்.

பொதுவாக பரவலாக இம்மாகாண மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையில் பெரும் பகுதி மத்திய சர்க்காருக்கு காணிக்கையாக அளிக்கப்பட்டுவிடுகிறது. அவ்வகையில் பார்க்குமிடத்து திராவிடநாட்டின் காமதேனுவாகிய 16 கோடியும் திராவிட மக்களுக்குப் பயன் படப்போவதில்லை என்பது உறுதி.

ஆகவே, இம்மாகாணத்தில் எவ்வளவு வரி, வசூலானாலும் அது கண்டு நாம் ஆனந்திக்க வழியில்லை. இம்மாகாண மக்கள் தரும் வரி புன்னைக்காய் அத்தனைக்கே ஒப்பாகும். இதனை நிதி அமைச்சர் கோபாலர் உணரவேண்டும். உணர்ந்து, இம்மாகாண வரிப்பணம் இம்மாகாணத்தை வாழவைக்க வழி கோல வேண்டும்.

திபேத் கம்யூனிஸ்டு வசமாவது உறுதி

லண்டன், நவ. 30—
திபேத்திலிருந்து செய்யப்பட்ட பஞ்சன்லமா தன் நாட்டை விடுதலை செய்து தன்னைப் பதவியில் மாற்றும்படி சீனகம்யூனிஸ்டுகளைக் கேட்டுக்கொண்டிருப்பதாக செய்தி கிடைத்திருக்கிறதென்று ஸ்டேட்ஸ்மன்பத்திரிகை கூறுகிறது சியாங்கி மாகாணத்தில் கம்பம் என்ற இடத்தில் பஞ்சென்லாமா வாழ்ந்து வருகிறார்.

கம்யூனிஸ்டுகள் இந்த அழைப்பை ஏற்று திபேத்தை வசப்படுத்துவது உறுதி என்று அப்பத்திரிகை கூறுகிறது. ஞுளோப்

கிணறு வெட்டும் உதவித் தொகைத் திட்டம்

1949-50 ஆண்டு கிணறு வெட்டும் உதவித்திட்டத்துக்கென ஒதுக்கப் பெற்ற ரூ 1,57,00 000-ல் அக்டோபர் இறுதிவரை ரூ. 1 00 40,000-வரையில் விவசாயிகளுக்குப் பங்கிடு செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. இப்போது டெல்லியில் நடைபெற்று வரும் விவசாய அதிகாரிகள் மாநாட்டின் முடிவையொட்டியே மீதும் தொகையாகிய ரூ 49 லட்சத்தை விநியோகிப்பதா இல்லையா வென்பது தீர்மானிக்கப்படுமாம். மொத்தத்தில் இதுவரை 16 630 கிணறுகளுக்கு உதவித்தொகை யளிக்கப்பட்டிருப்பதாகவும், இதில் 152 கிணறுகள் வேலை முடிந்துவிட்டதாகவும், ஏனையவற்றின் வேலை நடந்துவருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. 1950 செப்டெம்பர் 30-க்குள் இவையனைத்தும் முடிவடைந்து விடுமென்றும் தெரிகிறது.

பழைய நிலையைப்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

உண்டு, உலகின்றனர் அரசியல் நிர்ணய சபை உண்மையான மக்களின் பிரதிநிதித்துவ சபையாக இல்லாவிடினும், பல லட்சக் கணக்கான ரூபாய்களை விழுங்கி இருக்கின்றது. நேருவின் அமெரிக்கப் பயணம், வெளிநாடுகளிலே உள்ள தூதுவர்கள், ஏஜென்டுகள், இவையெல்லாம், நம் ஏழை மக்கள் தரும் வரிப்பணத்திலிருந்தே நடைபெறுகின்றன என்பதை எண்ணும்போது மக்கள் ஏமாற்றமடைகின்றனர். இன்றைய மத்திய அரசாங்கத்தாரின் செலவுக் கணக்கைப் பார்த்தால்-இன்சால்வெண்ட் ஆகப்போகிறவன் தரும் நஷ்டக் கணக்கைப் போலத்தான் காட்சியளிக்கின்றது.

ஆனால் மத்திய சர்க்காரோ—மாகாணங்களின் உரிமைகளையும் தம் கையிலே வைத்துக் கொள்ளும் விதத்தில்-அரசியல் நிர்ணய சபை மூலம் சட்டம் செய்து கொண்டு விட்டனர். மாகாண சர்க்கார்கள், இனி பெரிய ஜில்லா போர்டுகளாகத்தான் இயங்கமுடியும். இந்த நிலையைத்தான் நாம் முதலிலிருந்தே கண்டித்து வருகிறோம். ஒரு மாகாணம் ஏறத்தாழ, ஒரு நாடு என்று சொல்லப்படும் நிலையைப் பெறவேண்டியிருக்க, உரிமை இழந்து தாழ்வதா முறை?

மத்திய சர்க்கார் நிர்வாகம் இனி, இரும்புச் சங்கிலியால் இறுகப் பிணைக்கப்பட்டது போலத்தான், மாகாணங்களை வைத்திருக்கும். வெளிவழி உரிமைகள் பெயரளவில் காணப்படும்.

வரியா-மத்திய சர்க்காரிடம் நோகக் கொடுத்துவிடு; திட்டமா-மத்திய சர்க்காரிடம் சமர்ப்பி; புதிய மாற்றமா-மத்திய சர்க்காரை அனுமதி கேள்; என்ற விதத்திலே மத்திய சர்க்கார் எஜமானாக ஆகிறது.

இந்தியாவின் பிரதமரோ, ஒரு காலத்தில் மாஸ்கோமணத்தைப் புகழ்ந்தவர், வீர சமதர்மியாகத் திகழ்ந்தவர், இன்று அமெரிக்காவின் காதலராகத் திகழ்கின்றார். சில மாதங்களுக்குமுன், 'பிளாக் மார்க்கட்' வியாபாரிகளை விளக்குமரத்தில் தூக்குமாட்ட வேண்டும் என்று கூறியவர், அமெரிக்கா புறப்படுமுன் - கொள்ளையடித்த வியாபாரிகளானாலும்—தாங்கள் மறைத்து வைத்துள்ள மூலதனத்தை ஒப்புக்கொண்டு, வெளியில் கொண்டுவந்தால் போதுமெனக் கூறலானார். அந்த அளவுக்கு—முதலாளித்துவ ஆதிக்கம் - ஜவகரையே ஆட்கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் தான் வெளிநாட்டு முதலாளிகளுக்கும் அழைப்புத்தந்துள்ளார் ஜவகர். மறுபடியும், வெளிநாட்டு முதலாளிகளும், உள்நாட்டு முதலாளிகளுமாகக் கூட்டுக்கொள்ளையடிக்க வாய்ப்பளிக்கப்படுகிறது. சென்ற வாண்டிலும் இவ்வாண்டிலுமாக 66-புதிய கம்பெனிகளுக்கு அனுமதியளித்திருக்கின்றனர் சர்க்கார். அவற்றிலே மட்டும் பலகோடி ரூபாய் வெளிநாட்டார் (அமெரிக்கரும் ஆங்கிலேயரும்) மூலதனம் போட்டுள்ளனர். மேலும் மேலும் வெளிநாட்டாருக்கு அனுமதியளிக்கவே கருதியுள்ளனர்.

எனவே-நாடு-முதலாளித்துவ நாடுகளின் வேட்டைக்காடாக ஆக்கப்படுவதைக் காண வேண்டப்படுகிறோம். அதிலும் இந்தப் போக்கின் விளைவு சென்னாட்டை, முழுவதும் சுரண்டலாக அமைவதை அறிந்தபின்-பிரிவினையை திராவிடநாடு-தென்னாடு-தனியாகப் பிரிய வேண்டும் என்பதை யார்தான் மறுக்க முடியும்?

அரசியலார், முதலாளித்துவ நாடுகளின் ஏஜன்டாக ஆவதில் உண்மையில் ஆபத்து இருக்கிறது. ஆசியாவிலேயே முதலாளித்துவம் இந்தியாவில் காலூன்றி தொழிலாளர் முகாம்களை முறியடிக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு இந்திய இசைவளிக்க காணும் தொழிலாளர் உலகம், எப்படி ஒத்துழைக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.

இந்தியா, உலக அமைதியில் உண்மையிலேயே விருப்பம் செலுத்தினால்-எந்தப் பக்கத்தையும் சேராமல் இருப்பதே அறிவுடைமையாகும். எதில் சேரினும்-உலகப்போரை கூவி அழைப்பதாகவே முடியும்.

இந்நிலையில் நம்மைப் பொறுத்தவரையில், இந்தப் போக்குள்ள வடநாட்டு ஏகாதிபத்தியக் கொள்ளையிலிருந்து விலகி, உரிமையோடு தனிக்கியங்கும் திராவிடத்தில், ஒன்றே சமூகமாகவும், சமத்துவமே பொருளாதார நெறியாகவும் கொண்டு மக்கள் வாழ்வை மலரச் செய்வதாகவே தி. மு. க. தோன்றியுளது.

தி. கழகத்தில் இருந்தவர்கள் மட்டுமன்றி-மற்றும் பல இயக்கத்தினரும் இதில் சேர்ந்து ஆதரிக்க முன்வந்துள்ளனர். எனவே-வாலிபர்கள் ஏராளமாகச் சேர்ந்து-இவ்வியக்கத்தை வலியுறச் செய்து, மக்கள் ஆட்சி மலரவும், நாடு நலம் பெறவும் மக்கள் வாழ்க்கை நிலை உயரவும் [illegible] துணையாகப் பாடுபட முன்வர கேட்டுக் கொள்கிறேன். வாழ்க திராவிடம், வளர்க தி.மு கழகம் வணக்கம்.

ரப்பர் உற்பத்திப் பெருக்க பத்தாண்டுத் திட்டம்

நாட்டின் ரப்பர் உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 16,000 டன்னிலிருந்து 40,000 டன் வரை பெருக்குவதற்கான பத்தாண்டுத் திட்டமொன்றை இந்திய சர்க்கார் வைத்திருப்பதாகத் தெரிகிறது. மொத்த உற்பத்தியில் 80 சதவிகிதம் கொச்சி, திருவாங்கூரிலேயே ஆகையால், அப்பகுதி உற்பத்தியாளர்களே இத்திட்டத்தில் மிக்க சிரத்தை கொண்டுள்ளார்களெனக் கூறப்படுகிறது.

இந்தியத் தேயிலைக்குக் கிராக்கி

லண்டன், நவ. 30—

பிரிட்டனில் வாரத்திற்கு ஒருவருக்கு அளிக்கப்பட்டு வரும் தேயிலை ரேஷன் இனி அரை அவுன்ஸ் அதிகமாக்கப்படும் என்று தெரிகிறது. இதனால் 80 00000 பவுண்டு தேயிலை வேண்டிவரும். இதைப்பெற இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் அதிகமாக தேயிலையை வாங்க வேண்டியிருக்கும் என்று இங்குள்ள வர்த்தக வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அங்கமுத்து—கற்பகம்

திருமணம்

2-12-49 காலை 9-மணிக்கு கணியூரில்

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் C. P. சிற்றரசு, K. A. மதியழகன் B. A., ஆகியோர் பேசுவார்கள்

அண்ணாவின் அரிய நூல்கள்

அண்ணாவின் அறைகூவல்	0—3—0
நாடகங்கள்	0—3—0
அறநிலையங்கள்	0—6—0
மேடைப் பேச்சு	0—1—6
பொருள்	0—4—0
மகா கவி பாரதியார்	0—6—0
மூலபலம் முறிகிறது	0—8—0

இரா. நெடுஞ்செழியன்

மனப்போக்கு மாறவேண்டும்	0—2—0
கம்பரும் வம்பரும்	0—4—0
சமத்துவம்	0—2—0
புதிய பாதை	0—8—0
கடவுளும் மனிதனும்	0—3—0
விடியுமா ? (நாவல்)	1—0—0

ஏஜண்டு கமிஷன் 25./· செலவு இனம்.

தனிப் பிரதி வேண்டுவோர் புத்தக விலைக்கு முன்பணம் அல்லது தபால் தலைகள் அனுப்புக

முன்னேற்றப் பண்ணை,
2/122, பிராட்வே, சென்னை-1.

சந்தா விவரம்

(உள் நாடு)

ஒரு மாத சந்தா	ரூ. 2—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 6—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 12—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 24—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது

(வெளி நாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ. 3—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 9—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 18—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி.பி: மூலம் அனுப்ப இயலாது

மானேஜர், "மாலை மணி"

இனி நடப்பவை

கணியூர்— இவ்வூர் தி. மு. கழகத்தின் துவக்கவிழா 2-12-49 வெள்ளி மாலை 7 மணிக்கு, உடுமலை நகர் மன்ற உறுப்பினர் தோழர் ஆர். மீனாட்சி சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ; சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன் பி. ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

• • •

திருவண்ணாமலை— இங்கு நடைபெற்றுவரும் அ. இ. சுதேசி கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சியை ஒட்டிய நிகழ்ச்சியாக, 2—12—49 மாலை 6-30 மணிக்கு தோழர் எம். கே. தியாகராஜபாகவதர் அவர்களின் வாய்ப்பாட்டு நடைபெறும்.

• * *

நாகூர்— இவ்வூர் தி. மு. க. அமைப்புக்கூட்டம், 3—12—49 சனியன்று மாலை தோழர் எஸ். வி சபாபதி அவர்கள் இல்லத்தில் நடைபெறும். கழக அமைப்பில் ஆர்வமுள்ள தோழர்களனைவரும் மேற்படி கூட்டத்தில் பங்கு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

அனுதாபம்

ஆர்க்காடு, நவ. 30—

ஆர்க்காடு தி. மு. கழகத் தோழர் எஸ். சிவானந்தம் அவர்கள் மகன் கலாநந்தன் 27—11—49 ல் இயற்கையெய்தியமைக் குறித்து ஆர்க்காடு தோழர் ஏ. டி. பாலசுந்தரம் (முன்னாள் பஞ்சாயத்து போர்டு தலைவர்) தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்.

திருச்சி மாவட்ட மாநாடு. தொண்டர் படை

திருச்சி, நவ. 30—

இம்மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் தி. மு. க. மாநாட்டைச் சிறந்த முறையில் நடத்த தொண்டர்கள் தேவை. இதுவே முதல் மாநாடு ஆனதால் பல வெளியூர் தோழர்களும் கலந்து கொள்வார்கள். வரும் தோழர்களுக்கு வசதி செய்து தொண்டாற்ற விருப்பு ஆர்வமும்கொண்ட தோழர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமோ தொண்டர்களாகப் பதிவு செய்துகொள்ளவும்.

ஏ. பி. தர்மலிங்கம், தொண்டர் படைத்தலைவர். என்.எஸ். பங்களா, தெப்பக்குளம் போஸ்ட் திருச்சி.

தொண்டர் படைத்துணைத் தலைவர்கள்:-தி. உ. சிவசங்கரன், கைலாசம்.

பிறப்பு

வலகம் (புதுக்கோட்டை) நவ20

இவ்வூர் தோழர் [illegible] அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் ரஞ்சிதபரிக்கு 15—10—49 அன்று ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு, 'குறள் வேந்தன்' எனப் பெயரிடப்பட்டது.

பெயர் மாற்றம்

மேற்படி தோழர் [illegible] அவர்களின் மூத்த பிள்ளைக்கு இருந்த 'ஞானதீபம்' என்ற பெயர் தமிழரசு என மாற்றி வைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சிகளின் நினைவாக ரூபாய் மூன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ—ர்)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர் [illegible] களில் தங்கள் சந்தா [illegible] குறித்து எழுத [illegible] கொள்ளப்படுகிறார்கள்

மானேஜர் "[illegible]"

வானொலி

சென்னை

(2—12—49 வெள்ளிக்கிழமை)

காலை:

7-00	துவக்கம்
7-15	தமிழில் செய்திகள்
7 30	கே. வ. சமி—பாட்டு
8-00	ஆங்கிலத்தில் செய்திகள்
8 15	சினிமா பாட்டுகள்
8-30	ஆர். எஸ். வேலையா—கிளாரினெட்

பிற்பகல்:

12-30	நடுத்தரப் பள்ளிகளுக்கு
1-00	மாதர் நிகழ்ச்சி
1-30	ஆங்கிலத்தில் செய்திகள்
1 40	சினிமா பாட்டுகள்
2 00	தமிழில் செய்திகள்
2-15	உயர்தரப் பள்ளிகளுக்கு
2 45	குரல்வளை

மாலை:

4 00	ஆரம்பப் பள்ளிகளுக்கு
4-30	ஐரோப்பிய சங்கீதம்
5-30	ஜி. சீதா—பாட்டு
6-00	ஆங்கிலத்தில் செய்திகள்
6-20	ஒய். என். சீனிவாசராவ்—பாட்டு

இரவு:

7-00	வி. எஸ். இராம[illegible]ணன்—பேச்சு
7-15	தமிழில் செய்திகள்
7-30	குரல்வளை
7-45	ஜர்ஸ சம்மேளனம்
8-00	அத்தான் வந்தார் (நாடகம்)
8-15	ரங்கநாயகி ராஜகோபாலன் வீணை
9-00	ஆங்கிலத்தில் செய்திகள்
9-15	பல்கலைக் கழகங்களுக்கு (ஆங்கிலம்)
9-30	நேயர் விருப்பம்
10-30	முடிவு.

* * *

திருச்சி

(2—12—49 வெள்ளிக்கிழமை)

காலை:

7-10	துவக்கம்
7-15	தமிழில் செய்திகள்
7-30	[illegible] எஸ். கிருஷ்ணமூர்த்தி—பாட்டு
8-00	ஆங்கிலத்தில் செய்திகள்
8-15	திருச்சி வாத்திய கோஷ்டி
8-30	பி. பொன்னம்மாள்-பாட்டு

பிற்பகல்:

12 30	நடுத்தரப் பள்ளிகளுக்கு
1-00	கதம்பம்
1-30	ஆங்கிலத்தில் செய்திகள்
1-40	ஒ. பி. சண்முகம்—பாட்டு
2-00	தமிழில் செய்திகள்
2-15	உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை:

4-00	ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-00	கே. பி. தேவராஜ—சாக்ஸபோன்
5-40	எஸ். கிருஷ்ணமூர்த்தி பாட்டு
6-00	ஆங்கிலத்தில் செய்திகள்
6-10	அறிவிப்புகள்
6-15	[illegible]
6 30	கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-5	தமிழில் செய்திகள்
7-30	[illegible]
7-45	[illegible]
8-00	சி. வேணுகோபால்-கிளாரினெட்
8-30	பி. பொன்னம்மாள்-பாட்டு
9 00	ஆங்கிலத்தில் செய்திகள்
9-15	சென்னையில் உள்ளபடி
9-30	அறிவிப்புகள் (ஆங்கிலம்)
9-35	விண்ணகத் தூது (இசை நாடகம்)
10 00	முடிவு.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 3/41, Muthumari Chetty Street, Madras-1.